
Google AdSense



மொழிபெயர்ப்பிற்கான சரிபார்ப்புப் பட்டியல்

# மொழிபெயர்ப்பதற்கு முன்பு கவனிக்க வேண்டியவை


உங்கள் உள்ளடக்கம் எந்தப் பிராந்தியத்தில் பார்க்கப்படுகிறது என்பதை அறிந்து அந்தப் பிராந்தியம் எந்த நாட்டில் வருகிறது, அங்குப் பேசப்படும் மொழி என்ன போன்ற விவரங்களைப் பெற, Google Analytics ஸின் நிலவியல் சார்ந்த அறிக்கையை இயக்குங்கள்.

முழு வலைதளத்தையும் மொழிபெயர்ப்பது சிரமமானதாக இருக்கலாம். இப்போதைக்கு, உங்களின் மிகப் பிரலமான உள்ளடக்கத்தையோ 'எப்போதும் வரவேற்பு இருக்கக்கூடிய' உள்ளடக்கத்தையோ மட்டும் மொழிபெயர்க்கலாமே. உங்கள் உள்ளடக்கத்தை விரைவாகச் சந்தைப்படுத்துவதற்கும் அதை நீடித்த காலம் பார்க்க வைப்பதற்கும் இது உதவும்.

உங்கள் புதிய சந்தைக்கான தனியுரிமையையும் தரவுப் பாதுகாப்பிற்கான சட்டங்களையும் படித்துப் பாருங்கள். உதாரணமாக, ஐரோப்பாவில் GDPRரைக் கருத்தில்கொண்டு உங்கள் வலைதளம் பிராந்திய அளவிலான சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இதைச் செய்வது சிக்கலாக இருக்கலாம். எனவே தொடங்குவதற்கு முன்பு சட்ட ஆலோசகரை அணுகவும்.

அத்துடன் மொழிபெயர்ப்பும் சிரமமானதாக இருக்கலாம். சிறிய திட்டப்பணிகளுக்கு எளிதான விரிதாளே போதுமானது, ஆனால் பெரிய திட்டப்பணிகளுக்கு மொழிபெயர்ப்பை நிர்வகிப்பதற்கான சிஸ்டத்தைப் பயன்படுத்துங்கள். இது செயல்முறையை ஒழுங்குபடுத்த உதவுவதுடன் 'மொழிபெயர்ப்பு நினைவகம்' போன்ற, நேரம்/விலையை மிச்சப்படுத்தும் கூடுதல் அம்சங்களை வழங்கும்.

உங்கள் வலைதளத்திற்கான பிளாட்ஃபார்மையும் வடிவமைப்பையும் கருத்தில் கொள்ளுங்கள். இதை ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்க முடியுமா? எழுத்துகளுக்கான இடமும் தளவமைப்பும்கூட முக்கியம். உதாரணமாக, ஜெர்மன் வார்த்தைகள் ஆங்கில வார்த்தைகளைவிட நீளமாக இருப்பதால் பக்கம் விரைவாக நிரம்பிவிடும். அராபிக் போன்ற பிற மொழிகளை வலதுபுறத்தில் இருந்து இடதுபுறமாக எழுத வேண்டியிருக்கும். சில வலைதளங்களில் சிறப்பு எழுத்துகளைக் கையாள முடியாது. யுனிகோடு (UTF-8) எந்தவொரு மொழியிலும் உள்ள அனைத்துவித எழுத்துகளையும் ஆதரிக்கக்கூடியது. எனவே அதையே பயன்படுத்துமாறு பரிந்துரைக்கிறோம்.



# மொழிபெயர்ப்பிற்கான உதவிக்குறிப்புகள்

01 சாதாரண மொழிபெயர்ப்பிற்கு ஆன்லைன் மொழிபெயர்ப்புக் கருவிகளைப் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால் அந்த மொழியைப் பேசுபவருக்கு ஆன்லைன் கருவிகள் மூலம் மொழிபெயர்த்த உள்ளடக்கம் சம்பந்தமே இல்லாததாக, அபத்தமாக அல்லது தவறானதாகத் தெரியலாம். இவற்றைத் தவிர்த்தல் நல்லது.

02 உள்ளூரைச் சேர்ந்த தகுதி வாய்ந்த மொழிபெயர்ப்பாளரைப் பணி அமர்த்தினால், உள்ளடக்கம் துல்லியமாக இருப்பதோடு மட்டும் இல்லாமல் உள்ளூருக்கு ஏற்ற விதமாகவும் அனைவரும் புரிந்துகொள்ளுமாறும் இருக்கும். பல சமூகங்களில் மொழிபெயர்ப்புகளைத் தங்களுக்குள்ளாகவே கிரவுடுசோர்ஸிங் செய்துகொள்வார்கள். இது ஏற்கெனவே உள்ள பார்வையாளர்களிடம் இருந்து உயர் தரத்திலான உள்ளடக்கத்தைப் பெறுவதற்கு உதவுகின்ற விரைவான, மிகச் சிறந்த வழியாகும்.

03 "the best of both worlds" அல்லது "call it a day" போன்ற வாசகங்கள் ஆங்கிலத்தில் அர்த்தமுள்ளதாக இருக்கும். ஆனால் இவற்றை எளிதாக மொழிபெயர்க்க முடியாது. எப்போதுமே மொழிபெயர்ப்பதற்கு முன்பு அதுபோன்ற வாசகங்களை அகற்றிடுங்கள் அல்லது அதற்கு இணையான வாசகத்தை வழங்குங்கள்.

04 பொதுவான வாசகங்களைப் பட்டியலிட்டு அவற்றை மொழிபெயர்க்க வேண்டுமா என்ற விவரத்தை வழங்கும் சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்த முயலுங்கள். பிராண்டு வார்த்தைகளையும் அவை எப்படித் தோன்ற வேண்டும் என்பதைக் குறித்தும் நீங்கள் வழிகாட்டலை வழங்கலாம்.

05 உலகளாவிய மொழித் தேர்வியை (Universal Language Selector - ULS) பயன்படுத்துங்கள். உங்கள் உள்ளடக்கத்தைப் படிப்பதற்கான மொழியைப் பார்வையாளர்கள் அமைப்பதற்கு எளிய மற்றும் இணக்கமான வழியை இந்த அம்சம் வழங்குகிறது.

Google AdSense

06 உங்கள் வலைதளம் விரைவில் வெவ்வேறு மொழிகளுக்கும் இருப்பிடங்களுக்குமான உள்ளடக்கத்தைக் காட்டும். எனவே சர்வதேச SEOவிற்கான சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதை உறுதிசெய்துகொள்ளுங்கள். உதாரணமாக, உங்கள் வலைதளத்தின் எந்தப் பதிப்பில் விளம்பரங்களைக் காட்ட வேண்டும் என்பதை Google அறிந்திருப்பதை உறுதிசெய்ய, hreflang குறிச்சொற்களைப் பயன்படுத்துங்கள்.



# மொழிபெயர்ப்பை மதிப்பாய்வு செய்தல்

ஒவ்வொரு நாட்டிற்கும் தேதிகள், சின்னங்கள், நாணயம் ஆகியவை சரியான வடிவமைப்பில் இருக்கிறதா என்பதைத் தவறாமல் சரிபார்த்துக்கொள்ளுங்கள். உதாரணமாக, UKவில் தேதிகள் வழக்கமாக DD/MM/YY என்ற வரிசையில் குறிப்பிடுவார்கள். ஆனால் அமெரிக்காவில் MM/DD/YY என்ற வரிசையில் இருக்கும். தசம மதிப்புகளும் ஆயிரங்களும் அந்தந்த பிராந்தியங்களில் பின்பற்றப்படும் முறைப்படி பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

உங்கள் படங்கள் அந்தந்த பிராந்தியங்களுக்கு ஏற்ற வகையில் இருப்பதையும் அவற்றில் உட்பொதிக்கப்பட்ட பிற மொழி வாசகங்கள் மொழிபெயர்க்கப்பட்டு இருப்பதையும் உறுதிசெய்துகொள்ளுங்கள். படங்களில் உள்ள உட்பொதிக்கப்பட்ட வாசகங்களை மொழிபெயர்ப்பது கடினமாக இருக்கும் என்பதாலும் அதற்குக் கூடுதல் செலவாகும் என்பதாலும், கூடியவரை உட்பொதிக்கப்பட்ட வாசகம் இல்லாத படங்களையே தேர்வுசெய்யுங்கள்.

உள்ளடக்கம் படிக்க எளிதாக இருப்பதற்கு, உங்கள் புதிய மொழியில் எழுத்து வடிவங்கள் பொருத்தமாக இருக்கிறதா என்பதைச் சரிபார்த்துக்கொள்ளுங்கள். பல மொழிகளுக்கும் Googleளின் எழுத்து வடிவங்களைப் பயன்படுத்திப் பார்த்து அனைத்து மொழிகளுக்கும் பொருந்தும் ஓர் எழுத்து வடிவத்தைத் தேர்ந்தெடுங்கள்.

கவனத்திற்கு: ஒவ்வொரு நாட்டிலும் ஒரே வண்ணம் வெவ்வேறு விஷயத்தைக் குறிப்பதாக இருக்கலாம். உதாரணமாக, வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நீல நிறம் நம்பிக்கையையும் தூய்மையையும் குறிக்கும். ஆனால் சீனாவில் அது பண்டிகை அல்லது திருவிழா நிகழ்வுகளைக் குறிக்கும்.

வலைதளத்தைச் செயல்பாட்டிற்கு வெளியிடும் முன்பு அதன் உள்ளடக்கம் சரியாக இருப்பதை உறுதிசெய்ய, அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவரை மதிப்பாய்வு செய்ய வையுங்கள். இணைப்பு வேகம் ஒவ்வொரு நாட்டிலும் வேறுபடும். மதிப்பாய்வு செய்பவரிடம், பக்கம் காட்டப்படுவதற்கு ஆகும் நேரத்தையும் கவனிக்கச் சொல்லுங்கள்.



# வலைதளம் வெளியிடப்பட்டதும் செய்ய வேண்டியவை

உங்கள் வலைதளம் இப்போது மொழிபெயர்க்கப்பட்டிருக்கும். எனவே நீங்கள் தயாராகிச் செயல்பட ஆரம்பித்துவிட்டீர்கள் என்பதை ஆன்லைனிலும் சமூக வலைதளங்களிலும் விளம்பரப்படுத்துவதன் மூலம் உங்கள் பார்வையாளர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

மொழிபெயர்ப்பின் மூலம் நீங்கள் நிர்ணயித்த இலக்குகளை அடைய முடிகிறதா என்பதையும் நீங்கள் சரிபார்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் வலைதளத்திற்கு எவ்வளவு பார்வையாளர்கள் வருகிறார்கள், எவ்வளவு நேரம் பார்க்கிறார்கள், ஒவ்வொரு மொழிக்கும் ஒரு பக்கத்தை மட்டும் பார்த்துவிட்டு வெளியேறும் பார்வையாளர்களின் எண்ணிக்கை என்னவாக இருக்கிறது போன்ற தகவல்களை வழங்கி Google Analytics இதற்கு உதவ முடியும். அத்துடன் உங்கள் வலைதளத்தின் மூலம் வருமானம் ஈட்டுவதாக இருந்தால் புதிய பார்வையாளர்கள் மூலம் வருவாயில் ஏற்படும் மாற்றத்தைக் கணக்கிடலாம்.

**மொழிபெயர்ப்பதற்கு நேரம் செலவாகும் என்பதுடன் கவனமாகத் திட்டமிட வேண்டியதிருக்கலாம். ஆனால் எங்கள் சரிபார்ப்புப் பட்டியலையும் சிறந்த உதவிக் குறிப்புகளையும் பயன்படுத்தி பார்வையாளர்கள் விரும்பும் சிறந்த உள்ளடக்கத்தை உங்களால் உருவாக்க முடியும்.**